DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.209/2023 | Deposition of Witness for : PW2 |
| Name : சித்திரைகுமார் | Father/Husband Name : சுப்பிரமணியன் |
| Age : 57 | Village : வடக்கு நல்லூர் |
| Taluk : திருச்செந்தூர் | Calling : விவசாயம் மற்றும் பணிக்கநாடார் குடியிருப்பில் உள்ள ஸ்ரீ கணேசர் மேல்நிலைப்பள்ளியில் வாட்ச்மேன் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20 July 2026.
Accused A1 present. A2 died. A3 absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் குரும்பூர் காவல்நிலைய எல்கைக்கு உட்பட்ட பகுதியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எங்கள் ஊரில் இருந்து கோவில்குடியிருப்புக்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 17 கி.மீ இருக்கும். நாசரேத்திலிருந்து என்னுடைய ஊரான வடக்குநல்லூருக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 கி.மீ இருக்கும். பள்ளிக்கூடத்தில் வாட்ச்மேனாக வேலை செய்து வருகிறேன் என்று நான் கூறியுள்ளேன் அவ்வாறு நான் பணி செய்யும் போது என்னுடைய பணி நேரம் எவ்வளவு என்றால் மாலை 6.00 மணி முதல் மறுநாள் காலை 6.00 மணி வரை ஆகும். காலை 6.00 மணிக்கு என்னுடைய பணி முடிந்த பிறகு எனக்கு அடுத்த சிப்ட் ல் வரும் வாட்ச்மேனிடம் பணியை ஒப்படைத்துவிட்டு செல்வேன் என்றால் சரிதான். நான் பொதுவாக வேலைக்கு வருவது எந்த வண்டியில் என்றால் இருசக்கர மோட்டார் வாகனத்தில் பணிக்கு வருவேன். இந்த வழக்கின் முதல் விசாரணையில் நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நான் சம்பவ இடத்திற்கு வந்ததாக நான் கூறியுள்ளேன் அ.சா.1 என்னை அழைத்ததனால் நான் அந்த சம்பவ இடத்திற்கு வந்தேனா என்றால் இல்லை, தற்செயலாக என்னுடைய தங்கை அ.சா.1 ஐ பார்ப்பதற்காக சம்பவ இடத்திற்கு வந்தேன். அ.சா.1 ன் கணவர் என்னுடைய உறவினர் என்றால் சரிதான், அவர் என்னுடைய தாய்மாமன் மகன் ஆவார். என்னுடைய தாய்மாமன் மகன் குடும்பம் எங்கு நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் கோவில்குடியிருப்பில் தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள். தற்போது அவர்கள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சென்னையில் வசித்து வருகிறார்கள். அ.சா.1 ன் கணவர் எந்த நாட்டில் இருக்கிறார் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அவர் எந்த நாட்டில் இருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது, அவர் வெளிநாட்டில் இருக்கிறார். அ.சா.1 ன் கணவர் எத்தனை வருடங்களாக வெளிநாட்டில் இருக்கிறார் என்றால் சுமார் 8 வருடங்களாக வெளிநாட்டில்

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 13:27:10 +0530

இருந்து வருகிறார். வழக்கு சம்பவ காலத்தில் அ.சா.1 எங்கு குடியிருந்து வந்தார் என்றால் கோவில்குடியிருப்பில் தான் குடியிருந்து வந்தார், வேறு எங்கும் குடியிருக்கவில்லை. அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடப்பிரச்சனை இருப்பது சம்பந்தமாக இந்த வழக்கிற்கு முன்பே எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. முதல் நாள் எதிரிகள் வந்து கம்பிவேலியை உடைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, கேள்விப்பட்டேன். நான் முதல்விசாரணையில் சொன்னது போல் இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்பவம் நடைபெற்று எவ்வளவு நேரம் கழித்து புகார் கொடுக்க சென்றேன் என்றால் மதியம் 3.00 மணிக்கு நானும் அ.சா.1 மற்றும் அரிகரன் ஆகியோர் காவல்நிலையம் சென்று புகார் அளித்தோம். அன்றைய தினமே போலீசார் எங்களை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எங்களை காவல்நிலையத்தில் வைத்து விட்டு புகார் கொடுத்த அன்றே போலீசார் வந்து வழக்கு சம்பவம் நடந்த இடத்தில் பார்வையிட்டு விசாரித்தார்கள். காவல்நியைத்தில் கொடுத்த புகார் மனுவை யார் எழுதினார் என்றால் ஒரு பெண் எழுதினார் அவர் சீருடையில் இல்லை. நான் காவல்நிலையத்திற்கு செல்லும் போது அங்கு யார்யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் காவல் உதவி ஆய்வாளர், காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் இருந்தார்கள். நான் காவல் உதவி ஆய்வாளரிடம் நடந்த விபரத்தை கூறினேனா என்றால் கூறினேன். காவல் உதவி ஆய்வாளர் அந்த பெண்ணிடம் சென்று மனு எழுதி சென்று வாருங்கள் என கூறியதனால் நான் மனுவை அவரிடம் சென்று எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். அ.சா.1 க்கு எழுத தெரியுமா என்றால் படிக்க தான் தெரியும், கையெழுத்து போடுவார், கொஞ்சம் தான் படித்துள்ளார். அ.சா.1 ன் ஊரில் அவருக்கு நிறைய உறவினர்கள் இருக்கிறார்களா என்றால் என் தாயாரின் உடன் பிறந்த சகோதரியின் பிள்ளைகள் அங்கு இருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கும் அ.சா.1 க்கும் பேச்சுவார்த்தை இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் யாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று எனக்கு தெரியாது ஆனால் என்னுடைய மாமனார் தான் அனுபவித்து வந்தார், தற்போதும் அவரது அனுபவத்தில் தான் உள்ளது. மேற்படி இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் வழக்கு சம்பவம் எனக்கு தெரியாது என்றாலும், என்னுடைய அத்தை மகன் கேட்டுக் கொண்டதற்கிணங்க அ.சா.1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கம்பிவேலியை எதிரிகள் உடைத்து கொண்டிருந்தார்கள் என்று அ.சா.1 என்னிடம் கூறினார் அதனால் நான் அங்கு வந்தேன், எதிரிகள் என்னை மிகவும் மோசமாக ஏசினார்கள். என்னுடைய அத்தை மகன் சம்பவம் நடந்த நேரத்தில் வெளிநாட்டில் இருந்தாரா அல்லது சென்னையில் இருந்தாரா என்றால் வெளிநாட்டில் இருந்தார். அவர் வெளிநாட்டில் இருந்தததாக தான் நினைத்து கொண்டிருந்தேன் ஆனால் அவர் சென்னையில் இருந்த விபரம் எனக்கு தற்போது தான் தெரியும். அவர் வழக்கு சம்பவ காவலத்தில் சென்னையில் தான் இருந்தார் அவர் மனைவியிடம் எதிரிகள் பிரச்சனை செய்வதாக என்னிடம் கூறினார் அதன் பேரில் தான் காவல்நிலையம் சென்று அ.சா.1 உடன் புகார் அளிக்க சென்றேன் சரியல்ல. அ.சா.1 என்னுடைய

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 13:27:17 +0530

நெருங்கிய உறவினர் என்பதால் தான் புகார் அளிக்க சென்றேன் என்றால் சரியல்ல, நான் நேரடியாக சம்பவத்தை பார்த்தேன். நான் முதல்விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த பிரச்சனையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இடப்பிரச்சனை காரணமாக அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இருக்கும் பிரச்சயைில் எதிரிகளை பணிய வைக்கும் வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிகள் மீது காவல்துறையினர் ஆலோசனையின்பேரில் பொய்யயான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. (3 வது எதிரி தனது தரப்பு குறுக்கு விசாரணையாக 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்)

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.20 13:27:23 +0530

Judicial Magistrate, Sathankulam.